1979 பிப்ரவரி 19] [திரு. ச. இராமச்சந்திரன்]

லாம். ஆனால் உரிமைப் பிரச்னை என்ன என்பதைப் பற்றி விளக்க ஆரம்பிக்கிறார்கள். உரிமைப் பிரச்னையை அவர்கள் தலைவரிடம் கொடுத்து இருந்தால் அது குறித்து அவர்கள் தெரிந்து கொள்வதற்கு எல்லா வாய்ப்புகளும் இருக்கின்றன. ஏற்கெனவே நேரம் அதிகமாகிக்கொண்டு இருக்கிறது. இன்றைக்கு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற இருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் அல்லது மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு நிச்சயமாக முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி, எச். பாண்டியன்): திரு. ஜேம்ஸ் கொடுத்த உரிமைப் பிரச்னை பேரவைத் தலைவரின் ஆய்வில் இருக்கிறது. திரு. ஜேம்ஸ் அவர்கள் யார் மீது உரிமைப் பிரச்னை என்று சொன்னதை அவைக்குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1979-ம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்றும் பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே. இந்த மசோதாவானது அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்து இருக்கின்ற கொள்கைக்கு இசைவாக இல்லை. மாநில அரசாங்கம் அர்ரியர்சை வசூல் செய்வதைத்தான் தள்ளி வைக்கிறது. ரத்து செய்யவில்லை. இதே போன்ற நிலைமை இருந்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் ரத்து செய்து இருக்கிறது. மேலும், பாக்கி வசூல் செய்வதை ரத்து செய்யவேண்டும் என்று இங்கே ஏற்கெனவே வலியுறுத்தப்பட்டு இருக்கிறது. இங்கே கொண்டு வரப்பட்டு இருக்கும் மசோதா ரத்து செய்வதற்கு பதிலாகத் தள்ளி வைக்க வேண்டும் என்று இருக்கிற காரணத்தால், நான் இந்த மசோதா அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன்.

[1979 பிப்ரவரி 19

திரு. பொ. உத்திராபதி: தலைவரவர்களே, ரெவின்யூ அமைச்சர்.....

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): இந்த மசோதா விவாதத்திற்கு வரும்போது பேசுங்கள்.

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு, எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச், பாண்டியன்) சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(அ) புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவு 1979

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, இதிலும் நான் ஏற்கெனவே எதிர்ப்பு தெரிவித்ததுபோல் தெரிவிக்க விரும்புகிறேன். புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விளைச்சல் இல்லாமல் போய்விட்டது. விளைச்சல் இருந்தால் தான் வசூலிக்கவும் நியாயம் இருக்கிறது. விளைச்சல் இல்லாமல் இருக்கிறபோது வசூலிக்கவும் நியாயம் இல்லை. அது எப்படி சட்டப்படி செல்லும். சட்டப்படி செல்லாத ஒன்றை ரத்து செய்வது தான் முறை என்று சொல்லிக்கொள்கிறேன்.

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.